# எழுந்து நிற்கட்டும் ஒப்பற்ற தலைவனுக்கான பேனா சிலை!

**திருவாரூர் கலைஞர் கோட்டத் திறப்பு விழாவில் நடந்த கலைஞர் நூற்றாண்டுக் கவியரங்கில் வித்தகக் கவிஞர் பா.விஜய் பாடிய கவிதை:**

உலகத்திலே
மதத்திற்காக ஒரு தலைவன் இருந்துள்ளான் வாழும்
நிலத்திற்காக ஒரு தலைவன் இருந்துள்ளான். படைக்
களத்திற்காக ஒரு தலைவன் இருந்துள்ளான்.
இனத்திற்காக ஒரு தலைவன் என்றால்
அது ஒரே தலைவன் தான். தமிழ் இனத் தலைவர்
முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான்.

நமது முதல்வர் அவர்கள்
கலைஞர் கோட்டத்தை
ஆழித்தேர் வடிவில் அமைப்பதற்கு காரணம் என்ன தெரியுமா?

கலைஞரே ஒரு திருவாரூர் தேர் தான்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய தேர் ஆரூர் தேர்.
ஆசியாவிலேயே மிகப்பெரிய தலைவர் கலைஞர்.

ஆழித்தேரின் உயரம் 94 அடி.
கலைஞர் வாழ்ந்த காலம் 94 வயது.

ஆரூர் தேரின் கம்பீரம் 5 அடுக்கு மாட்சி.
கலைஞரின் கம்பீரம் ஐந்து முறை ஆட்சி.

திருவாரூர் தேரில் பவனி வருவது தியாகராஜ சாமி.
கலைஞரெனும் தேரில் பவனி வருவது ஈ.வெ.ராமசாமி.

தமிழ்ச்சமூகத்தின் வரலாறு என்ன தெரியுமா?
ஈராயிரம் ஆண்டு வள்ளுவன்.
ஆயிரம் ஆண்டு ராஜராஜ சோழன்.
நூற்றாண்டு கலைஞர்.

திசையெல்லாம் ஊர் அதிர,
திருவாரூர் தேர் அதிர,
முத்தமிழின் சீர் அதிர,
மு க எனும் பேர் அதிர,
நாடெல்லாம் இலை உதிர,
நாமெல்லாம் தலை நிமிர,

திராவிட மாடலின் ஆட்சியை
திசையெல்லாம் தெறிக்கவிடும்
தளபதியாரின் தம்பிகளே!
கருப்பு, சிவப்பு தும்பிகளே!
சட்டமன்ற உறுப்பினர்களே, என் சக கவிஞர் பெருமக்களே!
அனைவருக்கும் சபை வணக்கம்.

இன்றளவில் இந்தியாவின்
சிம்மாசனத்தில் இருக்கும் தாமரையை
தமிழகத்தில் சின்னத் தெருவில் கூட பூக்க விடாமல்
ஓட, ஓட விரட்டி அடிக்கும் வெற்றித் தோட்டமே,
வீரக்கூட்டமே! தலைவரின் ரத்த ஓட்டமே!
பெரும் சபைக்கு வணக்கம்.

ஆயிரம் வணக்கம் அடுக்கடுக்காய் சொன்னாலும்
வணக்கங்களுக்கெல்லாம் முதல் வணக்கம்
ஆசான் வணக்கம்.

எங்கள் கந்தர்வத் தமிழகத்தின் கவிதை சிம்மம்.
சொற்களுக்கு உயிர் கூட்டி. கம்பீரத்திற்கு முடிசூட்டி.
எங்களுக்கெல்லாம் கலங்கரை விளக்காய்
வாழும் வழிகாட்டி.

அரசனைப் போல் போற்றுவான் கவிஞன்
எனும் கூற்றை மாற்றி
அரசனைப் போல் வாழ்வான் கவிஞன்
என்று, நிரூபித்த பெருந்தகை.

கருவாச்சி அரைத்த அம்மிக்கல்லுக்கிடையே
கனன்று கிடந்த தங்கமே!
தமிழ் எப்படி பேச வேண்டும் என்று
செதுக்கி கொடுத்த எங்கள் சிங்கமே!

விரல் வளத்தில் மட்டும் நீ வீரனல்ல,
குரல் வளத்திலும் நீ தீரன்.
அதனால்தான் கலைஞர் உன்னை தன்
பிடியில் வைத்திருக்கவில்லை
மடியில் வைத்திருந்தார்.

கருக்கருவா மீசை கொண்ட கவிதை தீரரே!
தூரத்திலேயே இருக்கும் கவிதை துரோணரே!
உங்களை அளவில்லாமல் நேசிக்கும் ஏகப்பட்ட
ஏகலைவர்களின் ஏகபோக வணக்கங்கள்.

அடுத்து எங்கள் தலைவர்;
அரியணையில் அமர்ந்திருக்கும் சூரிய புதல்வர்;

சூழ்ந்து நிற்கும் பகையை எல்லாம் தன்
சுருள் முடியழகில் சுழற்றியெறியும்
சுந்தரச் சோழா.. கவிஞர்களின் தோழா..
வயது ஏறாமலேயே வாழ்வது
உங்கள் வம்சத்துக்கே உரிய சொத்து என்பதாலா?..
எவ்வளவு டென்சன் இருந்தாலும்
கூலாக சிரிக்கும்



குறிஞ்சிமலர் குல்ஃபியே
கலைஞர் தன்னைத் தானே
க்ளிக் செய்த செல்ஃபியே!

சுற்றிய இடமெல்லாம் - கைப்பற்றிய இடமாக்கிய
வெற்றியின் பாடலே வேர்வையின் தேடலே
திசைகளை கலக்குமெங்கள் திராவிட மாடலே
இரண்டாம் கலைஞரே நிரந்தர இளைஞரே
இனமான தலைவரே எமை ஆளும் முதல்வரே

உன் ஜாதகத்திலேயே முதல்வராகும்
கட்டம் இல்லை என கிளி ஜோசியம்
பார்த்தவர்க்கெல்லாம் கிலிப்பிடித்து
அரசியல் கட்டத்தில் இருந்தே காணாமல் போக

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று நீ
முன்னேறும் வேகத்தில்..

ஆளுநர் மாளிகை மட்டுமா அதிர்ந்தது ஏற்கனவே
ஆண்டவர் மாளிகைகளின் அஸ்திவாரங்களும் அதிர்ந்தன...

முதல்வராய் மட்டுமல்ல முதல்வர்களில்
முதல்வராய் தெறிக்கவிடும்
தளபதி என்றழைக்கப்படும் தமிழ் நாட்டு மன்னவனே!
இருள்பிடியை நீக்க வந்த சுருள்முடி சூரியனே!

ஒரு பொம்மலாட்ட ஆட்சியை பொடி பொடியாய் ஊதிவிட்டு
அந்த குழப்பவாத கோஷ்டிக்கு கும்பாபிஷேகம் ஆக்கிவிட்டு
இபிஎஸ் ஓபிஎஸ் எல்லாம் பீஸ்பீஸாய் உடைத்துவிட்டு

பொறுப்பாக மட்டுமல்ல
நெருப்பாக ஆட்சி நடத்தும் நிரந்தர முதல்வா
வானளாவ வணக்கம்!

கிராமப்புறங்களில்
திருஷ்டிப்பட்டதென்றால்
துர்கையை வழிபடுவார்கள்..

காலம் பாராமல் உழைப்பதால்
முதல்வருக்கும் கண்படலாம் இலேசா
துர்காதேவியே துணையாய் இருக்கையில்
கவலையென்ன ராசா..

கலைஞர்!100! (உலகில் யாரையும் ஓரிரு சொற்களால் வர்ணிக்கலாம்...
கலைஞர் என்பது யாதெனின்..

நூற்றாண்டுகளை அளந்த
நாத்திக வாமனன்

ஆதிபராசக்தி அல்ல
ஆண் பராசக்தி

இந்தி என்னும்'
எலுமிச்சை மீது
ஏறி நின்ற ஆரூர் தேர்!
சக்கர நாற்காலியில் வந்த
சமூக நீதி!

வர்ணாசிரமம் நீக்கிய
அண்ணாவர்ணம்

சுரணைத் தமிழனின்
சுயமரியாதைக் குறியீடு!

எம்மாசனத்திலும் கம்பீர
சிம்மாசனம்

திரைப்படச் சுருளுக்குள்
தீயின்மொழியை பதிவிறக்கிய
நுண்பொருள் மிகு மென்பொருள்

அடித்தட்டு மனிதனின்
அசுரப் பாய்ச்சல்

சாத்திரக் கொழுப்பின் மேல்
சூத்திர இனம் தொடுத்த
ஆத்திரச் சாட்டை

சூடு வற்றிய இனத்துக்கு
சுடச்சுட தமிழ் செய்த
சூரிய கொப்பரை

பெரியாரின் பெருங்கோபம் அவர்
பேரறிஞனின் சுயரூபம்!

திரைவளர்த்த பிடிவாதம் அவர்
திராவிட ரசவாதம்!

கலைஞர் என்பது வெறும் உருவம் அல்ல..
அது தமிழன் என்று தன்னை உணர்பவனுக்கெல்லாம்
தசைக்குள் நிரம்பிய கருவம்..

கலைஞர் என்பது பட்டம் அல்ல...
அது தமிழர் தன் தலைக்கு
கட்டிக்கொண்ட
பரிவட்டம்...

எல்லோரும் எழுதும்போது எழுத்து முளைத்தது
கலைஞர் எழுதும் போதுதான்
தமிழ்த்தாய் தலை நிமிர
கழுத்து முளைத்தது.

கலைஞரின் வரலாற்றை இரண்டு வரிகளில் சொல்கிறேன்
திருக்குறள் மாதிரி..

தமிழ்மானம் காக்க
தண்டவாளத்திலே தலை வைத்தவன்.
அரசியல் வாழ்வில் தன்னை
எதிர்த்தவனுக்கெல்லாம் சிலை வைத்தவன்.

கலைஞர் என்பது வெறும்
மனிதப் பிறப்பு அல்ல அது பிரளய வெடிப்பு

குவளை என்ற
குளக்கரையில் பிறந்த ஒரு மனிதன்
சுல்தான்களும் சூரன்களும்
சுருட்டி விளையாடிய டெல்லி தலைநகரை
சுட்டுவிரலால் கட்டியசைத்து ஒரு
வேட்டி கட்டிய தமிழன்
ஆட்டுவித்தான் என்றால் என்னே ஒரு வியப்பு?

நெல்லுக்கு தலைசீவி புல்லுக்கு பூமுடித்து
சொல்லுக்கு சிக்கெடுத்து சொல்லாமல் சொக்க வைத்து
மஞ்சள் வெய்யிலை தோள்துண்டாய் போர்த்திய அந்த
மகா தலைவனைப் பற்றிய



**வித்தகக் கவிஞர் பா. விஜய்**

ஒரு நினைவலைக்குள் மூழ்குகிறேன்
நான் சொல்லச் சொல்ல
நீங்களும் வருவீர்கள்
அந்த இடத்துக்கு மெல்ல மெல்ல

மாபெரும் மைதானம்
காணும் இடமெல்லாம் இப்படி
கறுப்பு சிவப்பு எனும்
இருவண்ண கொடியசையும்
மா நாடு!

பந்தல் நிரம்ப பத்து லட்சம் பேர்

ஆரம்பம் முதலே கூட்டம்
இடம் பிடிக்க சுற்றும்
காலை 10 மணி முதல் ஒரு
ஆர்ப்பரிப்பு பற்றும்!
ஒரு காந்தப் புயலை சுமந்து கொண்டு
தூரத்தே ஒரு வெள்ளை நிற மகிழுந்து
ஆடி அசைந்து வரும்

அதன் கதவு திறக்கும்..

ஒரு தானியங்கி நாற்காலி இறங்கும்!
கிராமம் நகரம்
மிதிவண்டி பொதுவண்டிகளில்

பத்திரிகையாளர்கள் ஓரிடம் கூடி
பளிச் பளிச் என வெளிச்ச மழை வீச
கோடி விண்மீன் கொட்டியதோ என கூடாரமே கூச

மஞ்சள் சால்வை அணிந்த அந்த மாணிக்க வாசகனை
கருப்புக் கண்ணாடி சூடிய அந்த கலிங்கத்துப் பரணியை

இமயத்தை அசைத்து
இரு சக்கர வாகனத்தில் வைத்து
தக தக வென தங்கச் சூரியனை
ஆர்ப்பரித்து அதிரும் அரங்கிற்குள்
அழைத்து வருவார்கள்.

எங்கிருந்தோ ஒரு அசரீரி குரலாய்
அனீபாவின் குரல் ஓங்கி ஒலிக்கும்
ஓடி வருகிறான் உதய சூரியன்..

அப்படியே கிழக்கை இதழாக்கி
ஆகாயத்தையே ஐந்து விரலாக்கி
அந்த ஆயிரச் சுடர் கொண்ட
அறிவாலய நாயகனின் கையசையும்...
நாடி நரம்பு எஃகு தசைகள்
ஊன் உயிர் உடமெல்லாம்
முறுக்கேறி நிமிரும் பார்
அடேங்கப்பா
அதுதான் அந்தத் தலைவன் தனித்துவம்
காணக் கிடைக்காத காட்சி

நீதிமன்றம் விசித்திரம் நிறைந்த
பல வழக்குகளை சந்தித்து இருக்கிறது
கலைஞர் எழுதினார்
கலைஞருக்கே நடந்தது

எவனுக்கும் அடங்க மறுத்த
ஒரு மனித இதயம்
தான் அடங்க நீதிமன்றத்தில் நின்றது
நீதியை வென்றது
அது புதைக்கப்பட்ட இடம் அல்ல நண்பர்களே
பகுத்தறிவு விதைக்கப்பட்ட இடம்
சக்கர நாற்காலியோடு ஒரு
சரித்திரம் முடிந்து விட்டதென்று
சத்தமின்றி சிலர் பேசி
சர்க்கரை வினியோகிக்கிறார்கள்!
அவர்களிடம் சொல்லுங்கள்
எங்களின் அறிவாசான்

இரண்டு நூற்றாண்டுகளை அளந்த அந்த
இமாலயத் தலைவன்
சக்கர நாற்காலியோடு சாய்ந்து விடவில்லை
சக்கர நாற்காலி விட்டு உயிர்த் தெழுந்திருக்கிறார்!

தளபதி என்கிற புதிய
உருவத்தோடு!
தமிழினமே நிமிர்ந்து நில் பெரிய
கருவத்தோடு!

கலைஞர் உயிருடன் இல்லை என்கிறார்கள்
கலைஞர் உடலுடனும் இல்லை என்கிறார்கள்
யோசித்துப் பாருங்கள்
கலைஞர் எங்கே இல்லாமல் இருக்கிறார்

பேருந்தில் ஏறுகிறேன்
உடன் ஒரு மாணவனாய் வருகிறார்
அடுப்படியில் பார்க்கிறேன்
அங்கே அடுப்பாய் இருக்கிறார்
கிராமத்தில் இறங்குகிறேன்
சமத்துவபுரமாய் தெரிகிறார்
சாலையில் நடக்கிறேன்
பாலமாய் நிற்கிறார்

அண்ணாந்து பார்க்கிறேன்
மெட்ரோ வாய் ஓடுகிறார்
வீட்டுக்குள் வருகிறேன்
மின்விசிறியாய் சுழல்கிறார்
எழுதுவதற்கு அமர்கிறேன்
எதிரே தமிழாக வருகிறார்
சட்டசபையில் பார்க்கிறேன் அங்கே
முதல்வராகவே சிரிக்கிறார்

கலைஞர் கோட்டம் கண்ட தலைவர் இன்று தன்
தலைவருக்குக் கொடுத்திருக்கும்
பிறந்த நாள் பரிசு என்ன தெரியுமா?
இது சூரியனின் சொந்த வீடு
இது தாமரை இல்லா தமிழ் நாடு!

தமிழ் நாடு முழுக்க
காவி நிறமாக்கிவிடலாம் என்று
காவிப் பெயிண்டோடு வந்தவர்கள்..
முடிந்த வரை எல்லா சுவர்களிலும்
கலர் அடித்துப் பார்த்தார்கள்! ஆனால்

எல்லா சுவற்றிலும் 60 ஆண்டுகளாக
அடிமட்டம் வரை ஊறிக்கிடந்த
கறுப்பு சிவப்பை அழிக்க முடியாமல்
வெள்ளையாகிப் போனார்கள்;
சுவரில் இருக்கும் வண்ணத்தையே
மாற்ற முடியவில்லையே
ஒன்னரைக் கோடி உடன்பிறப்புகளின்
உயிரில் இருக்கும் வண்ணத்தை எப்படி மாற்ற முடியும்?

கடல் ஆவியானாலும் ஆகும்
தமிழ் நாடு காவி ஆகாது!

தமிழ்நாடு என்று சொல்லக்கூடாதென்றார் அவர்
தமிழ் நாடுதான் என் அடையாளம் என்றார் தலைவர்
சொல்லுக்கு ஒரு தளபதிதான்;

ஆளுநர் வெளி நடப்பு!
சட்டசபை சரித்திரத்திலேயே
சம்பவம் பண்ணினார் தலைவர்;
தில்லுக்கும் ஒரு தளபதிதான்;

கலைஞர் தளபதி
ஒரு கூர்மையான பார்வை சற்று
நேர்மையான பார்வையும் கூட..

நீங்கள் கலைஞரின்
பிரதிபலிப்பு என்றார்கள் சிலபேர்
நீங்கள் கலைஞரின்
மறுபதிப்பு என்றார்கள் சிலபேர்
நீங்கள்தான் கலைஞரே என்றார்கள் சிலபேர்

உண்மையை உரித்துப்பார்த்தால்..

பெரியாரிடம் பாடம்கற்ற அண்ணா
பெரியாரின் பிம்பமல்ல
அண்ணாவிடம் ஞானம்பெற்ற கலைஞர்
அண்ணாவின் பிம்பமல்ல
கலைஞரிடம் அரசியல்கற்ற நீங்கள்
கலைஞரின் பிம்பமல்ல..

பெரியார் அண்ணா கலைஞர்
மூவரையும் உள்ளே விதைத்து
மூலிகையாய் வெளியே முளைத்த
தனிப்பெரும் சக்தி!

தனித்துவ புத்தி!

அதனால்தான் அன்றே ஆரூடஞ் சொன்னார்கள்
ஸ்டாலின் is more dangerous than karunanithi.. என்று..

கலைஞரை விட நீங்கள்
கொடுத்து வைத்தவர்.
கலைஞர் ஆட்சியை விமர்சிக்க
ஒரு சிங்கமாவது இருந்தது.

ஆனால் பாருங்கள் உங்களை எதிர்க்க
சிங்கம் சிறுத்தை வேண்டாம்..
தமிழ் நாட்டில் இன்றொரு
தவளை கூட இல்லை

கலைஞர் ஆட்சி குறளோவியம்
தளபதியின் ஆட்சி குறயில்லா ஓவியம்

கலைஞர் செய்தது தொல்காப்பியம்
இன்று தினசரி
தளபதி செய்வது தில் காப்பியம்

கலைஞர் ஏ எம் பி எம் பாராத உழைத்த சி எம்
தளபதி பி எம் ஏ மிரளுகின்ற சி எம்

தமிழ் நாட்டின் தலைமகனாகவும்
தலைவர் கலைஞரின் மகனாகவும்
நீங்கள் பெற்றிருக்கிற பெருமை என்ன தெரியுமா?

கலைஞர் 100 நடத்திக் காட்டியிருப்பது தளபதிதான்
100 கலைஞராக நடந்து கொண்டிருப்பதும் தளபதிதான்

தமிழ் நாடு நிம்மதியாய் இருக்கும்
காரணம் என்னென்று தெரியுமா?

மத அரசியலில் தமிழர்கள்
விழ மாட்டார்கள் என்ற நம்பிக்கை மட்டுமல்ல
விழுவதற்கு கலைஞர் மகன்
விடமாட்டார் என்ற நம்பிக்கையில்தான்..

இதற்கு முன்னால் ஆட்சி முதல்வர் விமான நிலையத்துல பார்த்தேன்
எடப்பட்டி போறார்னா.. ஈ காக்கா நின்னு பார்க்கல

இப்ப தலைவர் கான்வாய் வருது அடேங்கப்பா
மக்கள் கூட்டம் ஆர்வம் ஈர்ப்பு

வெள்ளை வேட்டி சட்டையில் விண்ணிலிருந்து
வீதிக்கிறங்கிய தேவதூதனா?

எங்கள் கண்ணீரை துடைக்க
கம்பீரத்தோடு வந்து நிற்கும் காப்பாளனா?

பெருந்தொற்று காலத்தை
போர் போல் கையாண்ட மாவீரனா?

ஏகாதிபத்திய உலகில் ஏழைக்குரல் கேட்டால்
அடுத்த நொடி வந்து நிற்கும் ஆண் தேவதையா

சோர்ந்துபோன தமிழகத்தை
சொல் அணை கட்டி காக்க வந்த கரிகாலனா?
உதவிக் குரல் கேட்டதுமே
ஓடிவந்து கைகொடுக்கும் உயிர்த்தோழனா?
என்று தான் எண்ணுகிறோம்..

முதல்வா கலைஞரின் புதல்வா!
எதிர்ப்புகளை எரிசக்தியாக்கி
விமர்சனங்களை
பொடிப்பொடியாக்கும்
புரட்சிப் பாட்டே

பெருவெற்றி கண்ட
நற்றிளம் நாற்றே!

கோபாலபுரத்திலிருந்து
கொப்பளித்த ஊற்றே

கரிஅமில வாயுவே
கலக்காத காற்றே

களங்கமிலா நட்பே
கழகத்தின் கற்பே

ஒற்றைக் குடையின் கீழ்
ஒருகோடி தொண்டர்களை
வெற்றிக் களிப்போடு வைத்திருக்கும் தீரமே!
திராவிட வேழமே!

டெல்லி சுல்தான்கள்
தலைசூடிய தாமரையை

தமிழகத்தின் எல்லைக்குள்ளே
புல் நுனி கூட பூப்பூக்க விடா புயலே
புன்னகை வயலே..
புல்லாங்குழலே.. புத்துணர்வு புனலே

தமிழே
இயலே
சித்தரஞ்சன் சாலையில்
சித்திரம் போல் வீற்றிருக்கும் கயலே

செயலே

கலைஞர் எழுதிய கவிதை உயிலே
எழுபதை தொட்ட போதும்
எழில்மாறா அழகியலே

எதிர்ப்பே இல்லா
அதிசயமான அரசியலே

வங்கக் கடல் காற்று வந்து
வலது காதில் கைதட்ட
சங்கத்தமிழ் ஊற்றுவந்து
சபை நெடுக பூக்கொட்ட

ஏற்றுங்கள் அடுத்த நூற்றாண்டை நாங்கள்
எழுதுகிறோம் உங்கள் வரலாற்றை

உங்கள் ஆட்சியில் எழுந்து நிற்கட்டும்
அந்த ஒப்புற்ற தலைவனுக்கான பேனா சிலை
நிமிர்ந்து நிற்கட்டும் தமிழரின் தலை!
வெல்க உங்கள் ஆட்சி
வாழ்க கலைஞரின் மாட்சி!